# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

மனு எண் : 0388 / 2017 / ஊ

ஆணை எண் : 049 / 2017

நாள் : 30.03.2017

ப.சக்தி வேல்,
த/பெ. பழனி,
பாவாலி கிராமம்,
விருதுநகர் மாவட்டம். — மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
விருதுநகர் ஊராட்சி ஒன்றியம். — எதிர்மனுதாரர்

## ஆணை

விருதுநகர் மாவட்டம், பாவாலி ஊராட்சியில் வசிக்கும் திரு.ப.சக்திவேல் என்பவர், அவருடைய 20.03.2017 நாளிட்ட மனுவில் இந்திராகாந்தி தேசிய நினைவு குடியிருப்பு திட்டத்தில், பாவாலி கிராமத்தில் வசிக்கும் ப.முத்துமகன் வடிவேல் என்பவர், விருதுநகர் வட்டார வளர்ச்சி அதிகாரி திரு.தீபக், பாவாலி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திரு.நாகராஜன், ஊராட்சி செயலாளர் திரு.ராஜா ஆகியோர்களை மிரட்டி, வேறு பஞ்சாயத்தில் வசிக்கும் சந்திரன், த/பெ. மாரியப்பன் என்பவர் பெயரில் 4 முறை போலி கையொப்பமிட்டு விருதுநகரிலுள்ள யூனியன் வங்கி மேலாளர் உதவியுடன் அரசு பணத்தை கையாடல் செய்துள்ளார் எனத் தெரிவித்து, இதற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2014 –ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் , "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம், அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/7 (signature) 4/4/2017
செயலாளர்

(initials) 4/4/17

பெறுநர்

ப.சக்தி வேல்,
த/பெ. பழனி,
3/136, தெற்குத் தெரு,
பாவாலி கிராமம்,
விருதுநகர் மாவட்டம்.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.

உதிரி – 5.